பக்கங்கள் 19

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 23 திங்கட்கிழமை 06.05.2024 அதிர்வு 279


## அழுகிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு

நுவரெலியா, அக்கரபத்தனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டொரிங்டன் தோட்டத்தின் மேற்பகுதியிலுள்ள வனப்பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

03 ▶

## தென்னிலங்கைப் பாதாளக்குழு தமிழகத்தில் பதுங்கி நகர்வு?

### சம்பந்தப்பட்ட அறுவர் இதுவரை கைது



(ந.லோகதயாளன்)

தென்னிலங்கையைப் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் பலர் தமிழகத்திற்குள் புகுந்து ஒன்றுசேர்ந்து

02 ▶

## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு 'மொட்டு' பேராதரவு வழங்க வேண்டும்

### நாடாளுமன்றத் தேர்தல் மூலம் அரசை அமைப்பது தொடர்பில் பெரமுன கவனம் செலுத்த வேண்டும் என எஸ்.பி. கோரிக்கை



"ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு. எனவே, அந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முழு ஆதரவு வழங்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக அரசை அமைப்பது குறித்து பொதுஜன பெரமுன விசேட கவனம் செலுத்த வேண்டும்."

03 ▶



## தெல்லிப்பழை பெண் படுகொலையா? 16 வயது மகன் மீது பொலிஸ் சந்தேகம்

### தேடுதல் வேட்டை தொடர்கின்றது






(ந.லோகதயாளன்)

யாழ். தெல்லிப்பழையில் உயிரிழந்த தாயாரை மகன் கொலை செய்தாரா எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தெல்லிப்பழையில் உள்ள வீடொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் குடும்பப் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டது. அதேயிடத்தைச் சேர்ந்த கனடி ஜஸ்மின் என்ற 37 வயது பெண்ணே சடலமாக மீட்கப்பட்டார். அவர் கொலை

03 ▶

## ஹொரணை துப்பாக்கிச்சூடு: சந்தேகநபர் மடக்கிப் பிடிப்பு!

### வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட வேளை

களுத்துறை, ஹொரணை – கிரேஸ்லேண்ட் தோட்டத்தில் நேற்று முற்பகல் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாய் செல்ல முற்பட்ட சந்தர்ப்பத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அவர் கைது

03 ▶






போதைப் பொருள் கடத்தல்காரர்கள், வர்த்தகர்கள், பாவனையாளர்கள் மற்றும் பாதாள உலகக் கும்பல்கள் போன்ற தரப்புகளுக்கு எதிராகப் பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் – பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இணை ஒன்று சேர்ந்து ஆரம்பித்த 'யுக்திய'

03 ▶

# ஈழவேந்தனுக்கு யாழில் அஞ்சலி





முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகேந்திரனுக்கு (ஈழவேந்தனுக்கு) தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாணத்தில் அஞ்சலி நிகழ்வை முன்னெடுத்தத்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கவாசகர் கனகசபாபதி கனகேந்திரன் (ஈழவேந்தன்) கனடாவில் காலமானார் . அவரின் இறுதிக்கிரியை நேற்று கனடாவில் நடைபெற்றது.

இவரை நினைவேந்தும் வகையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கொக்குவில் அமைந்துள்ள அலுவலகத்தில் நினைவஞ்சலி நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

ஈழவேந்தனின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கயேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர் .

## பலாங்கொடையில் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

கடந்த மூன்று மாதங்களில் இரத்தினபுரி - பலாங்கொடை பகுதியில் மாரடைப்பால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

திடீர் மரண பரிசோதனைகளின் போது இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது என்று பலாங்கொடை வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி பத்மேந்திர விஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று மாதங்களில் 30 முதல் 50 வயதுக்கு இடைப்பட்டவர்களிடையே பதிவான 70 சதவீதமான உயிரிழப்புகளுக்கு மாரடைப்பே காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசேடமாக இளம் மற்றும் நடுத்தர வயதுடையோர் மாரடைப்பினால் உயிரிழப்பது அதிகரித்துள்ளது என்று பலாங்கொடை வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி கூறியுள்ளார்.

இந்தநிலையில், 30 வயதுக்கு மேற்பட்ட நபர் ஒருவருக்குத் திடீரென வயிறு மற்றும் மார்பு பகுதியில் எரிச்சல், தலைச்சுற்றல் போன்ற நிலைமைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உடனடியாக வைத்தியர் ஒருவரைச் சந்தித்து குருதி மற்றும் ஈ.சி.ஜி. பரிசோதனைகளை முன்னெடுப்பது சிறந்தது என்றும் பலாங்கொடை வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி பத்மேந்திர விஜயதிலக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## விபத்தை ஏற்படுத்தும் வகையில் மோட்டார் சைக்கிள்களை செலுத்திய 12 பேர் கைது!

விபத்தை ஏற்படுத்தும் வகையில் வீதியில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திய 12 பேர் பம்பலப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி – கொழும்பு பிரதான வீதியின் டுப்ளிகேசன் வீதியில், விபத்தை ஏற்படுத்தும் வகையில் சிலர் நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துகின்றனர் என்று பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இதையடுத்து குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

இதன்போது இருபது வகையான மோட்டார் சைக்கிள்களைப் பொலிஸார் கையகப்படுத்தியுள்ளனர்.

**தென்னிலங்கை...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

போலி ஆவணங்கள் மூலம் அங்கிருந்து வெளிநாடுகளிற்கு தப்பிச் செல்ல முயல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழகம் சிவகங்கையில் வைத்து 3ஆம் திகதி தென்னிலங்கையர் இருவர் தமிழகம் கியூப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இலங்கையில் இருந்து சட்ட விரோதமாக படகுமூலம் பயணித்து தமிழகம் சிவகங்கையில் மறைந்திருந்தவர். மற்றவர் விமானம் மூலம் சிவகங்கையைச் சென்றடைந்துள்ளார். இவர்கள் சென்னையில் உள்ள ஒருவர் மூலம் இந்தியாவின் குடியுரிமை ஆவணங்களை போலியாக தயாரிக்க முயன்ற சமயமே கியூப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர். இந்த இரு தென்னிலங்கையருடன் இந்தியாவைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பாட்டார்.

கைது செய்யப்பட்ட தென்னிலங்கையரில் ஒருவர் பிரபலமான பாதாள உலககுழுவைச் சேர்ந்தவர் என்பதனால் – அவர் இலகுவில் அடையாளம் காணப்படலாம் என்ற காரணத்தால் – அவரது வித்தியாசமான படத்துடன் கூடிய மற்றுமோர் (இரண்டாவது) கடவுச் சீட்டை பிறிதொருவர் பெயரில் இலங்கையில் இருந்து ஓர் முஸ்லிம் நபர் கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி எடுத்துச் சென்றுள்ளார்.

இவ்வாறு போலிக் கடவுச் சீட்டை எடுத்துச் சென்றவரும், அவருக்கு உதவிய இருவருமாக மேலும் மூவர் நேற்றும் தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் இலங்கையை மையமாக்கொண்டு இயங்கும் ஓர் பாதாள உலக குழு அல்லது ஓர் பயங்கரவாத குழு தமிழகத்திற்குள் ஊடுருவியிருக்கலாம் எனக் கருதப்பட்டு விசாரணைகள் தீவிரமாக முடுக்கி விடப்பட்டுள்ளன எனத் தெரிகிறது. இக்குழுவில் வேறு நபர்களும் பதுங்கியுள்ளனரா எனவும் ஆராயப்படுவதாகக் கூறப்பட்டது.




பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

காலம் : 11.05.2024, 12.05.2024

இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

நடவடிக்கை நான்காவது மாதத்தைக் கடக்கின்றது.

ஆனாலும் சிவனின் அடியையும் முடியையும் தேடிக் களைத்த கதையாக, போதைப் பொருள் வர்த்தக வலையமைப்பின் மூலத்தைக் கண்டுபிடித்துச் சிதறடிக்க முடியாது தள்ளாடுகின்றன இந்த இணையின் வழிநடத்தலில் களம் இறங்கிய பொலிஸ் குழுக்கள்.

காரணம் என்னவென்று தேடிப்பார்த்தால் விவரம் இதுதான்:-

இந்தக் கடத்தல்காரர்களில் பெரும்பாலானோர் துபாயில் சொகுசுவாழ்க்கை வாழ்ந்து கொண்டு அங்கிருந்தபடி இங்கு கடத்தலில் ஈடுபடுவோரை வழிகாட்டி, தமது பிஸ்னஸை வழமை போல செழிப்பாக நடத்தி வருகின்றனர் என்பது விசாரணையில் தெரிய வந்திருக்கின்றது.

பாரிய அளவில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் வர்த்தகத்தில் பழைய தொடர்பாளர்கள் பலரைப் பொலிஸார் மடக்கினாலும், வெட்ட வெட்டத் துளிர்க்கும் மரம் போல புதியவர்கள் - முகம் தெரியாதவர்கள் - பலர் போதைவஸ்து வர்த்தக வலையமைப்புக்குள் வந்து கொண்டிருக்கின்றார்களாம்.

புதியவர்களை ஆரம்பத்தில் அடையாளம் கண்டு புலனாய்வு வளையத்துக்குள் கொண்டு வருவதும் சிக்கலாக உள்ளதாம்.

புதியவர்கள் பலர் இணைந்துள்ளனர் என்பது தொடர்பில் பொலிஸ் புலனாய்வு அமைப்புகளுக்கு திட்டவட்டமான தகவல் கிடைத்துள்ளது. ஆனால் அவர்களின் விவரங்களை விரைந்து திரட்டி எடுப்பதுதான் விவகாரமாக இருக்கின்றதாம்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் வர்த்தகம் மூலம் அதிகளவு சொத்துக்களை ஈட்ட முடியும் என்ற நிலைப்பாட்டில், இந்த மோசடியில் புதிய கடத்தல்காரர்கள் வந்து இணைந்த வண்ணம் உள்ளனர் எனப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட யுக்திய நடவடிக்கைகளின் போது போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

ஆயினும், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் புதிய கடத்தல்காரர்களை கைது செய்வது இலகுவான காரியமல்ல என விசாரணை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சமீபகாலமாக இந்த விவகாரங்களில் புதிதாக ஈடுபட்டு வருபவர்கள் குறித்து போதைப் பொருள் தடுப்புப் பிரிவிலோ, பொலிஸாரிடமோ எந்தத் தகவலும் இல்லாததால், சோதனையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

புதிய வர்த்தகர்கள் சர்வதேச போதைப்பொருள் வலையமைப்பிலும், உள்நாட்டு முக்கிய போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளிலும் இணைந்துள்ளனர் என்பது பொலிஸ் துறைக்கு தலையிடியாக மாறியுள்ளது.

அண்மைய நாள்களில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்ட பெரும்பாலான கடத்தல்காரர்கள் புதிய கடத்தல்காரர்கள் எனவும் அவர்களுடன் தொடர்புடைய புதிய வலையமைப்பைக் கண்டு பிடிப்பது சிரமமாக இருக்கின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

* * *

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம், கட்சிக்கு எதிரான வழக்கு விடயம் போன்றவை குறித்து ஆராய்வது உட்பட்ட விவகாரங்களுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு வரும் 19ஆம் திகதி கூடும் என்று இப்போது தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்துக்கு அடுத்த நாள் இது.

கூட்டம் ஒத்திவைக்கப்படாமல் திட்டமிட்டபடி நடந்தேறினால் கண்டு கொள்வோம்...!

## ஹொரணை...

செய்யப்பட்டுள்ளார்.

அவர் ஹொரணை பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு நேற்றுப் பிற்பகல் அவர் டுபாய் செல்ல முற்பட்டபோது விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், அவருக்கு எதிராக நீதிமன்றத்தால் முன்னதாகவே வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

ஹொரணை -கிரேஸ்லேண்ட் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவர் இந்தத் துப்பாக்கிச் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இதன்போது படுகாயமடைந்த நபர் ஹொரணை வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்

இந்தநிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தெல்லிப்பழை...

செய்யப்பட்டாரா? அல்லது தற்கொலை செய்யப்பட்டாரா? என ஆராயப்படும் நிலையில் அது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ கருத்துத் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பகுதியில் வீடொன்றில் இருந்து சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அதேநேரம், சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் 16 வயதுடைய மகன் காணாமல்போயுள்ளார்.

அவரைப் பொலிஸார் தொடர்ந்தும் தேடி வருகின்றனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் மகன், 'மொபைல் கேம்ஸ்' எனப்படும் கைபேசி விளையாட்டுகளுக்கு அடிமையானவர் எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன், 16 வயதுடைய மேற்படி சிறுவன் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கலாம். ஏனெனில் அவரது அறையில் சில வாசகங்கள் இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளன." - என்றார்.

## அழுகிய நிலையில்...

அந்த வனப் பகுதிக்குள் நேற்றுக் காலை சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு மக்கள் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

சடலம் அடையாளம் காண முடியாதவாறு அழுகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிவானின் களப் பரிசோதனையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடலம் நுவரெலியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## ஜனாதிபதித் தேர்தலில்...

- இவ்வாறு ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான கருத்துக்கள் மாத்திரம் வெளிப்பட்டதே தவிர தொழிலாளர்களின் உரிமை பற்றி எந்த அரசியல் கட்சி மேடைகளிலும் பேசப்படவில்லை. மே தினக் கூட்டம் அரசியல் கூட்டமாக மாற்றமடைந்துள்ளமை கவலைக்குரியது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் பலமுறை முன்வைத்துள்ள போதும் ஜனாதிபதியிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை. அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தும் சூழல் காணப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு. எனவே, அந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முழு ஆதரவு வழங்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக அரசை அமைப்பது குறித்து பொதுஜன பெரமுன விசேட கவனம் செலுத்த வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் பலப்படுத்தும் பொறுப்பு கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது. கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் கட்சிக்குள் இணைத்துக்கொள்ளுமாறு கட்சியின் தலைவர்கள் மற்றும் தேசிய அமைப்பாளரிடம் வலியுறுத்தியுள்ளேன்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ இவ்விடயம் குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் பேச்சில் ஈடுபட்டுள்ளார். கட்சியில் இருந்து விலகிச் சென்ற சிரேஷ்ட உறுப்பினர்களை மீண்டும் இணைத்துக்கொண்டு ஒன்றிணைந்து செயற்பட்டால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் பலமான அரசை அமைக்கலாம்." - என்றார்.


யாழ்
↕
நாகை
சுற்றுலா செல்வோம்
சிவகங்கையில்
INDSRI FERRY
13/05/24
இல் இருந்து தினசரி சேவை
ரூ 15,000*
இல் இருந்து
• பாரம்பரிய சுற்றுலா
• வணக்கத்தலங்கள்
• அழகிய மலையகம்
மேலும் அனுபவிக்க...
பதிவுகளுக்கு
www.sailindsri.com
Google play
Download on the App Store

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தொ(ல்)லைபேசிகள்

நவீன தொழில்நுட்பத்தின் முக்கியமான ஒரு பாதிப்பு குறித்து தற்போது எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது.

இந்தச் சிக்கலுக்கு விரைந்து வினைத்திறனான ஒரு தீர்வு காணப்படாவிட்டால் சமூகம் மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ளும் என்றும் அபாய மணி ஒலிக்கப்படுகின்றது.

விஞ்ஞான வளர்ச்சியால் - தொழில்நுட்ப விருத்தியால் - பூமிப் பந்து சுருங்கி, பூகோளக் கிராமமாகிவிட்டது என்று மகிழ்கிறோம். உண்மைதான். விஞ்ஞானப் பெரு வளர்ச்சியால் மக்களும், சமூகங்களும், நாடுகளும் பல்வேறு நன்மைகளை அடைந்தாலும், அவற்றின் பக்க விளைவுகளாகப் பல பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் மோசமான தீங்குகளையும் கூட எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது என்பது கவனிக்கத்தக்கது.

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிப் பாய்ச்சலின் விளைவான பூகோளமயமாதல், மீண்டெழ முடியாத பக்கப் பாதிப்புகளையும் நம் மத்தியில் விதைக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

உலக இயக்கமே இன்று கைத்தொலைபேசிக்குள் என்றாகிவிட்ட சூழலில், அதன் விளைவான ஒரு பெரும் பாதிப்புக் குறித்து அதிர்ச்சி தரும் தகவல் வெளியாகி இருக்கின்றது.

இலங்கையில் சுமார் 10 லட்சம் குழந்தைகள் - சிறுவர், சிறுமியர் - கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாகியுள்ளனர் என்று குழந்தைகள் மனநல விசேட வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக, கையடக்கத் தெலைபேசிகளுக்கு அடிமையாகியுள்ள குழந்தைகளை அதிலிருந்து மீட்க முன்வருமாறு பெற்றோர்களுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான உதயகுமார அமரசிங்க கையடக்கத் தொலைபேசிகளுக்கு எல்லையற்ற விதத்தில் அடிமையாகியுள்ள குழந்தைகளை அதிலிருந்து மீட்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கூறுகின்றார்.

"தற்போது பெற்றோர்களால் கிடைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

"முதலில் கையடக்கத் தொலைபேசிகளில் விளையாட்டுக்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அநேக குழந்தைகள் தற்போது யூடியூப், இன்ஸ்டாகிராம், முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களுக்கும் அதிகளவில் நுழைந்து அடிமையாகியுள்ளனர்.

"கையடக்கத் தொலைபேசிகளில் அதிகளவில் நேரத்தைக் கடத்துவது சிகிச்சை பெறவேண்டிய ஒரு மன நோய்.

"இவ்வாறு கையடக்கத் தொலைபேசிகளில் அதிகளவில் நேரத்தைக் கடத்துவதால் குழந்தைகள் கண் பார்வையில் பிரச்சினை, மனநிலை பாதிப்புகள் போன்ற பல நோய்களுக்கு ஆளாக நேரிடும்.

"மேலும், தற்போது பெற்றோர் மற்றும் சகோதரர்களுடன் காணப்பட்ட தொடர்பு துண்டிக்கப்படும் அதே வேளை, வன்முறைமிக்க ஒரு பரம்பரையை உருவாக்கியுள்ளது." எனத் தெரிவிக்கின்றார்.

மேலோட்டமாகப் பார்க்கையில் இவை அற்ப விவகாரங்கள் போன்று தோற்றினாலும், இது ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

சமூக விழுமியங்கள், வழக்காறுகள், பண்பாடுகள், குடும்பப் பற்றுணர்வு, பந்தபாசம் போன்றவை செழிக்காத ஒரு சமூகக் கட்டமைப்பை கைத்தொலைபேசிகளுக்கு அடிமையாகிவிடும் இளம் சமுதாயம் உருவாக்கும் என்றே பலரும் அஞ்சுகின்றனர்.

இது வெறுமனே சிறுவர், சிறுமியர் அல்லது குழந்தைகள் மட்டப் பிரச்சினை மட்டுமல்ல, 18 வயதுக்கு மேற்பட்ட இளம் சமுதாயத்தினர் - ஏன் வயது முதிர்ந்தவர்கள் கூட - இப்போது கைத்தொலைபேசிகளுக்கு அடிமையாகும் - அதிலேயே தங்கி இருக்கும் - ஒரு வாழ்க்கை முறையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

கைத்தொலைபேசியின் பாவனையை நாம் தேவையோடு மட்டுப்படுத்த வேண்டும். அது நம்மை கட்டுப்படுத்தும் நிலைமை உருவாக விட்டு விடக்கூடாது. ஆனால், யதார்த்தத்தில் நிலைமை இப்போது சமூக மட்டத்தில் கைமீறிச் செல்வதாகவே தோன்றுகின்றது.



# எச்சரிக்கை மட்டத்துக்கு வெப்பநிலை உயருமாம்

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்தின் சில இடங்களிலும் வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்துக்கு உயர்வடையக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன் மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களிலும் வெப்பநிலை அதிகரிக்கக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளிலும் இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# பணத்திற்காகக் கட்சியையே மைத்திரி காட்டிக் கொடுத்தார்



## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

”பணத்துக்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காட்டிக் கொடுத்துவிட்டார். ஜனாதிபதி வேட்பாளர் விஜேதாஸ ராஜபக்ஷ என அவரால் தன்னிச்சையாக தீர்மானம் எடுக்க முடியாது.”

– இவ்வாறு சுதந்திர கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

”செயலாளர் பதவியிலிருந்து என்னை நீக்கியமை குறித்து நான் கவலையடைவில்லை. ஆனால் கட்சிக்கும் எனக்குமிடையிலான பிணைப்பை முற்றாக இல்லாமலாக்கும் வகையில் எனது உறுப்புரிமையும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பறிக்கப்பட்டமையே வேதனையளிக்கிறது. எவ்வாறிருப்பினும் எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிமன்றத்தின் ஊடாக நீதி கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

கட்சியின் அங்கத்தவர்கள் அல்லாத ஒருவர் தற்போது பதில் தவிசாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். மலைநாட்டு ஒப்பந்தத்தின் மூலமே எமது நாடு காட்டிக் கொடுக்கப்பட்டது. அதே போன்று தற்போது மலைநாட்டு பகுதியில் உள்ள ஒருவரால் சுதந்திர கட்சியும் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. அவரே புதிய தவிசாளருக்கான பெயரை முன்மொழிந்துள்ளார்.

பதில் தவிசாளராக நியமிப்பதற்கு சுதந்திர கட்சியில் வேண்டியளவு சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால் இன்று காசுக்காக கட்சி காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மே தினத்தன்று விஜேதாஸ ராஜபக்ஷவே சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஜனாதிபதி வேட்பளர் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஆனால் அவரால் அவ்வாறு தனித்துத் தீர்மானம் எடுக்க முடியாது.

அரசியல் குழுக் கூட்டம் கூடி தீர்மானம் எடுக்கப்பட்டு, அந்த தீர்மானம் மத்திய குழுவில் நிறைவேற்றப்பட்ட பின்னரே இறுதி தீர்மானத்தை எடுக்க முடியும். ஆனால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி அவ்வாறு கூறினாலும், விஜேதாஸ ராஜபக்ஷ தான் இது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை எனக் கூறுகின்றார். எவரிடமாவது பணம் இருக்கிறது என்பதற்காகவும், அமைச்சுப்பதவி இருக்கிறது என்பதற்காகவும் அவருக்கு ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க வாய்ப்பளித்தால் இது நியாயமானதல்ல.”– என்றார்.



# 9 ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் சேவையிலிருந்து சட்டரீதியாக விலகினார்கள்

விடுமுறையை அறிவிக்காமல் சேவைக்கு சமுகமளிக்காதிருந்த 9 ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவ உறுப்பினர்கள், பொதுமன்னிப்பு காலத்தினுள் இதுவரையில் சேவையிலிருந்து சட்டரீதியாக விலகியுள்ளனர்.


இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விடுமுறை பெறாமல் சேவைக்கு சமுகமளிக்காதிருந்த இராணுவ உறுப்பினர்களுக்கு முறையாக சேவையிலிருந்து விலகுவதற்கு வாய்ப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை அவ்வாறு சட்டரீதியாக சேவையிலிருந்து விலகுவதற்கான பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டு இரண்டு வாரங்களில், அவ்வாறான 9 ஆயிரத்துக்கும் 735 இராணுவ உறுப்பினர் சேவையிலிருந்து விலகியுள்ளனர் என இராணுவத் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

# நாடாளுமன்ற கட்டடத்தை புனரமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுப்பு



நாடாளுமன்றம கட்டடத்தை புனரமைப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடம் சேதமடைந்துள்ளதாக வெளியான செய்திகள் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

# சிறார்களுக்குக் கைபேசி வழங்கும்போது பெற்றோர்களுக்கு அவதானம் வேண்டும்

## பொலிஸார் எச்சரிக்கை



சிறார்களிடம் கைபேசிகளை வழங்குவது தொடர்பில், பெற்றோர்கள் அவதானமாக செயற்படுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

அவர்களுக்குக் கைபேசிகளை வழங்குவதன் காரணமாக பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், யாழ்ப்பாணம் – தெல்லிப்பழையில் உள்ள வீடொன்றிலிருந்து மீட்கப்பட்ட பெண்ணொருவரின் சடலம் தொடர்பில், கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் – தெல்லிப்பழை பகுதியில் வீடொன்றில் இருந்து சந்தேகத்திற்கு இடமான முறையில் உயிரிழந்த பெண்ணின் சடலமொன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டிருந்தது.

அதேநேரம், சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின், 16 வயதுடைய மகன் காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில், அவர் தொடர்ந்தும் தேடப்பட்டு வருகின்றார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் மகன், 'மொபைல் கேம்ஸ்' எனப்படும் கைபேசி விளையாட்டுக்களுக்கு அடிமையானவர் என தெரியவந்துள்ளது.

அத்துடன், 16 வயதுடைய அந்த சிறுவன் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கலாம் எனவும், அவரது அறையில் சில வாசகங்கள் இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், இதன்காரணமாக குறித்த 16 வயதுடைய சிறுவன் தமது தாயை கொலை செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.




# சாதாரண தரப் பரீட்சை இன்று; ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இம்முறை 3 லட்சத்து 87 ஆயிரத்து 648 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 65 ஆயிரத்து 331 தனியார் விண்ணப்பதாரர்களுமாக மொத்தமாக 4 லட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சார்த்திகள் நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 527 பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதேவேளை விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்காக விசேட பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.



# பெண்களுக்கு பொருளாதாரத்தில் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் மது போதைக்கு எதிரான இயக்கம் நேற்று நடத்திய விழிப்புணர்வுக் கருத்தரங்கின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார்.

'மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனையால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும், சவால்களும்' என்ற தொனிப்பொருளில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை ஒரு சவாலான விடயமாகக் காணப்படுவதாக தெரிவித்தார்.



போதைப்பொருள் பாவனையால் பெண்கள் அதிகளவில் சவால்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் இந் நிலையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

போதைபொருளுக்கு எதிரான பிரசாரங்களை செய்வதை விடுத்து, இளைஞர், யுவதிகளை மாற்று செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் திறன்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும் வடக்கு ஆளுநர் தெரிவித்தார்.

இதற்காக தனது பணிப்புரைக்கு அமைய வடக்கு மாகாண விளையாட்டுத் துறை மற்றும் கலாசார திணைக்களம் ஆகியன இணைந்து கிராமிய மட்டத்தில் புதிய செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் வழங்கப்படும் போது சிறந்த மாற்றங்களை எதிர்பார்க்க முடியும் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நிலையான பொருளாதாரத்தை பெற்றுக்கொள்வதற்கான புதிய திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், போதைப்பொருள் குடும்பங்களின் அடிப்படையை சிதைத்துக் கொண்டிருக்கும் நிலையில் , அதற்கு எதிராக செயற்பட அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் வடக்கு ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

# இந்தியாவிலிருந்து முட்டையை இறக்குமதி செய்ய மீள அனுமதி

இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய மீண்டும் ஒருமுறை அனுமதி வழங்கப்படும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அங்குணுகொலபெலஸ்ஸ பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மே மாதத்தில் முட்டையின் விலை கணிசமாக குறைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், முன்னதாக இந்திய முட்டை இறக்குமதியை நிறுத்தியதன் பின்னர், சில வர்த்தகர்கள் முட்டை விலையை தன்னிச்சையாக அதிகரித்துள்ளனர் என அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.





# பள்ளத்தில் கவிழ்ந்த ஓட்டோ

## யுவதி உயிரிழப்பு

கண்டி - பன்வில பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 21 வயதான யுவதியொருவர் உயிரிழந்துள்ளார்.

ஆடைத்தொழிற்சாலையொன்றின் ஊழியர்களை ஏற்றிச்சென்ற ஓட்டோ ஒன்று பன்வில அரத்தன பகுதியிலுள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த 3 பெண் ஊழியர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஏனைய இருவரும் காயமடைந்த நிலையில் மடுகல்கெல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக தெல்தெனிய ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய சாரதி தெல்தெனிய ஆதார வைத்திசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரதியின் கவனயீனமே விபத்திற்கான காரணம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் மீளாய்வுப் பெறுபேறுகள் வெளியீடு

2022 கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் மீளாய்வு பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

www.doenets.lk எனும் இணையத்தள முகவரி ஊடாக மீளாய்வு பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பரீட்சை பெறுபேறுகள் மீளாய்விற்காக 49 ஆயிரத்து 312 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

250,311 விடைத்தாள்கள் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டன எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

0112 784 537, 0112 784 208, 0113 188 350 மற்றும் 0113 140 314 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

# யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்பட்டிருந்தன என அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திர குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது ஒரேயொரு முன்மொழிவு மாத்திரமே கிடைக்கப்பெற்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.




அதற்கமைய விரைவில் இதற்கான யோசனை தயாரிக்கப்படவுள்ளது.

இதனிடையே, எதிர்வரும் ஜுலை மாதம் முதல் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து எயார் இன்டிகோ விமான சேவை நிறுவனமும் விமானப் பயணங்களை முன்னெடுக்கவுள்ளது.

தற்போது எயார் எலையன்ஸ் விமான சேவை நிறுவனம் மாத்திரம் விமான சேவைகளை முன்னெடுத்து வருகின்றது.

எயார் எலையன்ஸ் விமான சேவை நிறுவனத்தினால் கொழும்பு - சென்னை இடையே நாளாந்தம் ஒரு விமான சேவை முன்னெடுக்கப்படுகின்றது.

# பொதுவேட்பாளர் பற்றி பேசும் உங்களுக்கு சஜித் எதற்காகத் தூது அனுப்ப வேண்டும்?

## கோவிந்தன் கருணாகரம் எம்.பியிடம் மனோ கணேசன் கேள்வி



'மனோ மூலம் தூது விடாது எம்மிடம் நேரடியாக சஜித் கூற வேண்டும்' எனத் தமிழீழ விடுதலை இயக்க நண்பர் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. கூறி இருக்கின்றமை ஆச்சரியம் அளிக்கிறது. தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என மும்முரமாக செயற்படும் உங்களுக்கு எதற்காக சஜித் தூது விட வேண்டும் என எனக்கு தெரியவில்லை. பொது வேட்பாளர் தொடர்பில் உறுதியான முடிவை எடுங்கள். முதலில் அதை செய்யுங்கள். அப்புறம் புறா விடு தூது, அன்னம் விடு தூது, மான் விடு தூது, தென்றல் விடு தூது என்பவைகளை பார்க்கலாம். சஜித்திடமும் பேசலாம்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

தன்னைச் சந்தித்த 'மக்கள் மனு – வடக்கு, கிழக்கு மாகாண சிவில் சமூக தூதுக்குழு'விடம் சஜித் பிரேமதாஸ, தான் 13 ஆம் திருத்த மாகாணசபை சட்டத்தை முழுமையாக அமுல் செய்ய உள்ளார் எனவும், அதுபற்றி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்க இருக்கிறார் எனவும், அதன் மூலம் சிங்கள மக்களின் ஆணையை பெற உள்ளார் எனவும், எனது முன்னிலையில் உறுதி அளித்தார். 'மக்கள் மனு – வடக்கு, கிழக்கு மாகாண சிவில் சமூக' தூதுக்குழுவிடம் இதுபற்றி நண்பர் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. கேட்டு அறியலாம் எனவும் மனோ கணேசன் கூறியுள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற, தமிழீழ விடுதலை இயக்க தலைவர் அமரர் சபாரத்தினத்தின் நினைவேந்தல் நிகழ்வில், கோவிந்தன் கருணாகரம் எம்.பி., த.மு.கூ. தலைவர் மனோ கணேசனை பற்றி வெளியிட்ட கருத்து பற்றி மனோ எம்பி மேலும் கூறியவை வருமாறு:-

தனது இந்த நிலைப்பாடு பற்றி, சஜித் மே தினம் அன்றும் மீண்டும் ஒருமுறை கூறியுள்ளார். சஜித்தின் இந்த நிலைப்பாடு பற்றியே நான், எனது கிளிநொச்சி மே தின உரையில் தெரிவித்தேன். நான் கிளிநொச்சிக்கு, அங்கு நடைபெற்ற இலங்கை தமிழரசு கட்சியின் மே தின கூட்டத்தில் சிறப்பு பேச்சாளராக, நண்பர் சிவஞானம் சிறிதரன் எம்.பியின் அழைப்பை ஏற்று வந்து கலந்து கொண்டேனே தவிர, சஜித்தின் தூதுவராக வரவில்லை. மேலும், எனது உரையில், 'நான் கிளிநொச்சிக்கு சஜித்துக்கு வாக்கு கேட்டு வரவில்லை' என்றும் கூடக் குறிப்பிட்டேன்.

மேலும், 13 ஆம் திருத்த மாகாண சபை முறைமையை வடக்கு – கிழக்கு மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக நான் ஒருபோதும் கூறவில்லை. அப்படி நான் ஒருபோதும் கூறுவதும் இல்லை. ஆனால், 13 ஆம் திருத்த மாகாணசபை முறைமை என்பது இன்றைய அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டம். இது புதிதாக வருகின்ற ஒரு தீர்வு அல்ல. இன்று அரசியல் சட்டத்தில் இருப்பதை அப்படியே அமுல் செய்வார் என்பதாகத்தான் சஜித் கூறி உள்ளார்.

மேலும் மாகாணசபை முறைமை என்பது வடக்கு கிழக்கு மாகாணங்களை மாத்திரம் சார்ந்தது இல்லை. அது ஒன்பது மாகாணங்களையும் சார்ந்தது. ஆகவே சஜித், வடக்கு, கிழக்குக்கு மாத்திரம் அல்ல, முழு நாட்டுக்குமே இந்த உத்தரவாதத்தை வழங்கி உள்ளார் என்பதைத் தமிழ் கட்சிகள் அறிய வேண்டும்.

இப்படி சஜித் கூறுவதை போன்று, ஏனைய பெரும்பான்மை கட்சிகளின் உத்தேச ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களும் கூறுவார்களா என தமிழரசு கட்சி கேட்டு பார்க்க வேண்டும் எனவும் நான் என் உரையில் கூறினேன். அன்றைய கிளிநொச்சி இலங்கை தமிழரசு மே தின கூட்டத்தில், தமிழரசு தலைவர் அண்ணன் மாவை சேனாதிராசா, நண்பர் சிவஞானம் சிறிதரன் எம்.பி., மாகாணசபை அவை தலைவர் சிவஞானம் உட்பட பல தமிழரசுப் பிரமுகர்கள் அமர்ந்து இருந்தார்கள். பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு கொண்ட நண்பர் சீ.வி. விக்கினேஸ்வரன் எம்.பியும் இருந்தார்.

அன்றைய தினம் வரையிலும், இன்றும்கூட, இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் எந்த ஒரு நிலைப்பாடும் எடுத்து இருக்கவில்லை. ஆகவே எனது உரையில், சஜித் கூறியுள்ளமை போன்று ஏனைய முன்னணி வேட்பாளர்களும் கூறுவார்களா எனக் கேட்டு பாருங்கள் என இலங்கைத் தமிழரசுக் கட்சி நண்பர்களை நோக்கித்தான் சொன்னேன்.

ஏனெனில், 13 ஆம் திருத்த மாகாணசபை முறைமை என்பது கையில் இருக்கும் குருவி. அதற்கும் மேலான தீர்வு என்பது மரத்தில் இருக்கும் குருவி. இன்றைய அரசியல் சட்டத்தில் இருப்பதை முதலில் அமுல் செய்தால்தானே, அதையடுத்து புதிய அரசியல் சட்டத் தீர்வுக்குப் போகலாம்?

மற்றபடி, நண்பர் கோவிந்தன் கருணாகரம், நண்பர் சீ. வி. விக்கினேஸ்வரன் ஆகியோர் இன்று ஆர்வத்துடன் முன்னெடுக்கும், தமிழ் பொது வேட்பாளர் என்ற யோசனையை மறுதலித்தும் நான் பேசவில்லை. தமிழ் கட்சிகளுக்கு, தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த முழு உரிமை உள்ளது என்றுதான் கூறினேன். ஆனால், புதிய தீர்வு தொடர்பில் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் எந்தவொரு சிங்கள வேட்பாளரும் எழுதி எல்லாம் கொடுக்க மாட்டார்கள் என்றும், அப்படி கொடுத்தால் அவர்கள் தெற்கில் சிங்கள வாக்காளர்களிடம் சிக்கலை எதிர்கொள்வார்கள் எனவும் எனது பட்டறிவில் பட்டதைச் சொன்னேன்.

மேலும், தமிழ்ப் பொது வேட்பாளர் கோஷம் என்பது வடக்கு – கிழக்குக்குக் மாத்திரம் பொருந்தும். மலையகம் உட்பட தென்னிலங்கைக்கு பொருந்தாது. ஏனெனில் வடக்கு – கிழக்கு ஒரு தளம். மலையகம் உட்பட தெற்கு வேறொரு தளம். இதையும் எனது உரையில் கூறினேன்.

இவ்விடயங்கள் தொடர்பில், வரலாறு முழுக்க எனக்கு மிக தெளிவான யதார்த்தபூர்வமான நிலைபாடுகள் இருப்பதாக நம்புகிறேன். இதை நண்பர் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. அறிய வேண்டும். என்னிடம் தடுமாற்றங்கள் கிடையா. தடுமாற்றம் இருப்பது உங்களிடம்தான். முதலில் உங்கள் தெளிவான நிலைபாடுகளை கூடிக் கலந்து பேசி அறிவியுங்கள். அதன் பிறகு புறா விடு தூது, அன்னம் விடு தூது, மான் விடு தூது, தென்றல் விடு தூது என்பவைகளை பார்க்கலாம். – என்றார்.




# கற்பிட்டி - உச்சமுனை கடற்பிரதேசத்தில் ஒருதொகை பீடி இலைகள் கண்டுபிடிப்பு!

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி - உச்சமுனை கடற்பிரதேசத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் ஒருதொகை பீடி இலைகள் கடந்த வெள்ளிக்கிழமை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

எனினும் இந்த சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை எனக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

வடமேற்குக் கடற்படைக் கட்டளையின் விஜய கடற்படையினரால் இந்தக் கடற்பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்தச்பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

உச்சமுனை பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட உர மூடைகளை கடற்படையினர் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது, 04 உர மூடைகளில் 120 கிலோ கிராம் பீடி இலைகள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கும் நோக்கில் இந்த பீடி இலைகள், கடல்மார்க்கமாக கொண்டுவரப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிக்கின்றனர் எனக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்படையினரால், கைப்பற்றப்பட்ட 120 கிலோ கிராம் பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தமது பொறுப்பில் தான் வைத்துள்ளனர் எனக் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 30 ஆம் திகதி கற்பிட்டி முகத்துவாரம் பகுதியில் இருந்து 1230 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

புத்தளம் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவினருடன் இணைந்து கடற்படையினரும், இராணுவத்தினரும் கூட்டாக சேர்ந்து ஒபிரதேசத்தில் முன்னெடுத்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களில் கற்பிட்டி பிரதேசத்தில் பத்தலங்குண்டு, இப்பந்தீவு, கீரிமுந்தல், மாம்புரி, தேத்தாப்பொல மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதிகளில் சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# சிறி சபாரத்தினம் கொல்லப்பட்ட இடத்தில் நேற்று நினைவஞ்சலி

## ரெலோ பிரமுகர்கள் உணர்வுடன் முன்னெடுப்பு

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 38 ஆவது நினைவு தினம் இன்று அக்கட்சியினால் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அன்னங்கைப் பகுதியில் ஸ்ரீ சபாரத்தினம் கொலை செய்யப்பட்ட இடத்தில் இந்த நினைவஞ்சலி இடம்பெற்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம், ரெலோ இயக்கத்தின் உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம். தியாகராஜா நிரோஷ், துரைராஜா ஈசன், சபா குகதாஸ், ரெலொ பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

மறைந்த தலைவரின் திருவுருவப் படத்திற்கு பொதுச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து நினைவஞ்சலி முன்னெடுக்கப்பட்டது.








# ஸ்மார்ட் மாணவனை உருவாக்குகின்றமை போலவே ஸ்மார்ட் விவசாயியையும் நாட்டில் உருவாக்குவோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரை

ரஜரட்ட பிரதேசத்தில் பெரும்பான்மையானவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி இந்த விவசாயிகளை இலக்காக கொண்டு ஸ்மார்ட் கல்வியைப் போலவே ஸ்மார்ட் விவசாயத்தை உருவாக்கி, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் நிலத்தில் உயர்தரமான உற்பத்தியைப் பெற்று, உள்நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாது ஏற்றுமதிக்கு உகந்த பயிர்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பத்தை அவர்களுக்கு வழங்கும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 175 ஆவது கட்டமாக 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் அனுராதபுரம், மிஹிந்தலை, திரப்பனை, அதுங்கம, கெமுனு வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது, பாடசாலையின் நடனம் மற்றும் அரங்கேற்றங்கள் குழுக்களுக்கு ஆடைகள் கொள்வனவு செய்வதற்காக ஒரு லட்சம் ரூபா பணத்தையும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரிடம் சஜித் பிரேமதாஸ வழங்கி வைத்தார்.

அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சூளுரைத்தார்.

இஸ்ரேல் போன்ற நாடுகளில் பயிரிடுவதற்கு ஏற்ற சூழல் இல்லாவிட்டாலும் பயிரிடுவதில் சிறந்து விளங்குகின்றனர். சொட்டுநீர் பாசனம், பசுமைக் குடில், முடாக்கு போன்ற முறைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இரண்டு பருவங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட நம் நாட்டின் விவசாய சுழற்சியை வலுப்படுத்தி, ஓர் இடைப்பட்ட பருவத்தில் மேலதிக செய்கையை மேற்கொள்ள முன்வர வேண்டும். விவசாயிகளின் பயிர்களுக்கு நிலையான விலை கிடைக்க வேண்டும். களஞ்சியங்கள் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். இதன் ஊடாக நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நமது நாடு 100 பில்லியன் டொலர் கடன்பட்டுள்ளது. கடன் சுமை காரணமாக பல குடும்பங்கள் தங்கள் சொத்துக்களை அடமானம் வைத்துள்ளனர். மக்கள் விவரிக்க முடியாத துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். மக்களின் துன்பத்தை அறிந்த தலைவராக, வாய்ச் சவடால் தலைவர்கள் போலன்றி செயல்படும் தலைவராக மாறுவேன். இந்த வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்புவதே ஒரே தீர்வு என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

41 லட்சம் பாடசாலை பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கு இந்நாட்டிலுள்ள எந்தவொரு தலைவரும் வழங்காத அற்புதமான நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு ஏமாற்றுத் தலைவரின் பக்கம் சென்றதன் காரணமாக நாடு வங்குரோத்தானது. எனவே 2024 ஆம் ஆண்டிலாவது ஸ்மார்ட் நாட்டை உருவாக்க நாம் ஒன்றிணைய வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

அதிகாரம் இல்லாமல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செல்வந்தர்களின் உதவியைப் பெற்று பிரபஞ்சம் மற்றும் மூச்சு திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக அரசு ஒதுக்கும் பணத்தை வைத்து இந்தத் துறைகளை மேம்படுத்த முடியாது. இந்த அசாதாரண சூழ்நிலையில் சட்டகங்களுக்குள் சிக்கிக் கொள்ளாமல் புதிய வழியில் சிந்தித்து முடிவுகளை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.











# ‘பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்’ காத்தான்குடியில் ஊடக அமர்வு

(பழுவூரான்)

காத்தான்குடி சுதந்திர ஊடகவியலாளர் போரத்தின் ஏற்பாட்டில் ‘பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்’ எனும் தொனிப் பொருளில் ஊடக செயலமர்வொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை செய்குல் பலாஹ் கல்வி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

போரத்தின் தலைவர் எம்.எச்.எம். அன்வர் தலைமையில் நடைபெற்ற இந்த ஊடகச் செயலமர்வில், வளவாளராக சிரேஷ்ட ஊடகவியலாளரும், விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான எம்.பீ.எம்.பைறூஸ் கலந்து கொண்டு, இன்றைய நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செயலமர்வை சிறப்பாக நடத்திச் சென்றார்.

தற்காலத்தில் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கின்ற போலிச் செய்திகளை எவ்வாறு இனங்காண்பது, தற்காலத்தில் சமூகவலைத்தளப் பாவனையின் போது எவ்வாறான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்பன போன்ற பல்வேறு விடயங்கள் வளவாளரால் தெளிவூட்டப்பட்டன.

இந்தச் செயலமர்வில் மூத்த ஊடகவியலாளர்கள், இளம் ஊடகவியலாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டமையுடன், நிகழ்வின் இறுதியில் கலந்து கொண்டோருக்குச் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

















# இரு வலம்புரி சங்குகளுடன் பாலாவியில் ஒருவர் கைது!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - பாலாவி பகுதியில் இரண்டு வலம்புரி சங்குகளை எட்டு லட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்ய முயற்சித்த இளைஞர் ஒருவர் புத்தளம் பிரிவு குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வரகாபொல, புளத்கொஹுபிடிய பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது. பல வருடங்களுக்கு முன்னர் குறித்த வலம்புரிகளை கொழும்பில் தனது பெற்றோர் வாங்கி வீட்டில் வைத்திருந் தனர் என சந்தேக நபர் விசரணையின் போது தெரிவித்துள்ளார்.

எனினும், அனுமதிப்பத்திரம் இன்றி குறித்த வலப்புரி சங்குகளை வைத்தி ருந்த குற்றத்திற்காக சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த புத்தளம் பிரிவு குற்ற விசாரணை பிரிவினர் நட வடிக்கை எடுத்துள்ளனர்.



# வறட்சியான காலநிலையில் மலையப் பகுதியில் காடுகள், புதர்களுக்குத் தீ வைக்கும் விஷமிகள்!

(மஸ்கெலியா விசேட நிருபர்)

நாட்டில் நிலவும் வறட்சியான கால நிலை காடுகள், புதர்கள் வறண்டு கிடக் கின்றன. இச்சூழலில் மலையகத்தில் உள்ள பெறுமதி மிக்க சுற்றுச்சூழல் அமைப்பு அமைந்துள்ள வன நிலங்க ளுக்கு தீ வைப்பு பொழுது போக்காகக் காணப்படுவதாக மலையக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

மிகவும் பெறுமதி வாய்ந்த சுற்றுச் சூழல் அமைப்புகளான நாட்டின் மையப் பகுதியில் உள்ள காடுகளில் ஏற்படும் தீ காரணமாக, பழமையான மரங்கள், மருத்துவத் தாவரங்கள், வன விலங் குகள், பறவைகள், ஊர்வன, பட்டாம் பூச்சிகள் மற்றும் பிற உயிரினங்கள் அழிந்து போகும் அபாயம் உள்ளது.

மத்திய மலைப்பகுதியில் உள்ள பாதுகாக்கப்பட்ட காடுகள், நீர் ஊற்றுகள் உள்ள பகுதிகள், புதர் காடுகள், தோட் டங்கள், உயரமான மலை உச்சிகள் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் அமைப் புகள் தீ வைத்து எரிக்கப்படுகின்றன எனவும், சிலர் விலங்குகளை வேட்டை யாடுவதற்கும், விறகுகள் பெற்று கொள்ளும் நோக்குடனும் இவ்வாறான செயல்களை மேற்கொண்டுள்ளனர்.


கால்நடைகளுக்கு புதிய புல் வழங் குவதற்காகவுன், காடுகளுக்கு தீ வைக் கப்படுவதாக மலையக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

இதனால் நீர் ஆதாரங்கள் வறண்டு போவதுடன், வனவிலங்குகள் மரணம், இல்லாமல் போகும் அபாயத்தில் உள்ளதுடன் அரிய வகை தாவரங்கள் மற்றும் விலங்குகளின் அழிவு மற்றும் பல்வேறு ஆக்கிரமிப்பு தாவரங்கள் பரவுவது போன்ற பாதகமான நிலைமை ஏற்படும் அபாயம் இருப்பதாக சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் மேலும் தெரிவிக் கின்றனர்.

உடன் தீ பரவும் பகுதியில் தீயை அணைக்க அவசர தொலைபேசி இலக் கமான 117 அல்லது அனர்த்த முகா மைத்துவப் பிரிவு, பொலிஸ் நிலையம், இராணுவத் தளம், பொறுப்பான அரச நிறுவனம் மற்றும் வனப்பகுதியின் கிராம உத்தியோகத்தர் ஆகியோருக்கு உடனடியாக அறிவிக்குமாறு பொதுமக்களைக் கோருகின்றது வனத் துறை.

# எனக்கு குழந்தைகள் இல்லை உங்களின் குழந்தைகளுக்காகவே உழைக்கின்றேன்

## நரேந்திர மோடி தெரிவிப்பு



“எனக்கு குழந்தைகள் இல்லை. நாட்டு மக்களின் குழந்தைகளுக் காகவே தான் உழைகின்றேன்.”

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் எட்டாவா நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் அவர் மேலும் உரை யாற்றுகையில்,

“10 ஆண்டுகால ஆட்சிக்குப் பிறகு, உங்களிடம் ஆசி பெறுவதற்காக இன்று இங்கு வந்துள்ளேன். கடந்த பத்தாண்டு களில் எனது கடின உழைப்பை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். மக்களுக்கு சேவை செய்வதே எனது தர்மம். அடுத்த ஆயி ரம் ஆண்டுகளுக்கு இந்தியா வலுவாக இருப்பதற்கான அடித்தளத்தை நான் தயார் செய்து வருகிறேன்.

சமாஜ்வாதி கட்சியும், காங்கிரஸும் தங்களின் எதிர்காலத்திற்காகவும், தங்கள் குழந்தைகளின் எதிர்காலத் திற்காகவும் தேர்தலில் போட்டியிடு கின்றன. உத்தப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்துக்கும் எனக்கும் குழந்தைகளோ பொறுப்புகளோ இல்லை. எனவே நாங்கள், உங்கள் குழந்தைகளுக்காக உழைக்கிறோம்.

ஒரு கட்சி (சமாஜ்வாதி கட்சி) மைன் புரி, கன்னோஜ், எட்டாவாவை தங்களது பாரம்பரிய சொத்தாகக் கருதுகிறது. மற்றொரு கட்சி (காங்கிரஸ்) அமேதி, ரேபரேலியை தங்கள் பாரம்பரிய சொத் தாகக் கருதுகின்றது. ஆனால், ஏழை களுக்கு நல்ல வீடு கட்டிக் கொடுப்பது, கோடிக்கணக்கான பெண்கள், தலித் துகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்க ளுக்கு கழிவறைகள், மின்சாரம், தண்ணீர், இலவச ரேஷன், இலவச சிகிச்சை, குழந்தைகளுக்கு புதிய கல்விக் கொள்கை இவையெல்லாம் கிடைக்கச் செய்வதே நான் உருவாக்கி இருக்கும் பாரம்பரியம்.

சமாஜ்வாதி கட்சியும், காங்கிரஸும் தங்கள் குடும்பங்களுக்கும், தங்களது வாக்கு வங்கிகளுக்கும் நன்மை செய்ய மட்டுமே செயல்படுகின்றன. 2047 இல் உங்கள் சொந்த மகனோ, மகளோ பிரதமராகவும், முதல்வராகவும் வருவார் என்பது யாருக்குத் தெரியும். அரச குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இந்த நாட்டின் பிரதமராக வருவார்கள் என்ற கட்டுக்கதையை இந்த டீ விற்பனை யாளன் உடைத்துவிட்டான்.” – என்றார்.

# மோடி இடஒதுக்கீட்டினை ரத்து செய்ய விரும்புகிறார்

## தெலுங்கானா பிரச்சாரத்தில் ராகுல் காந்தி தெரிவிப்பு



“பிரதமர் நரேந்திர மோடி இட ஒதுக்கீட்டுக்கு எதிரானவர். அவர் மக்க ளிடம் இருந்து இடஒதுக்கீட்டை பறிக்க விரும்புகிறார்.”

– இவ்வாறு ராகுல் காந்தி கடுமையாக குற்றம் சாட்டியுள்ளார்.

தெலுங்கானாவின் அடிலாபாத் தொகுதிக்குட்பட்ட நிர்மல் என்ற இடத் தில் நடந்த தேர்தல் பேரணியில் கலந்து கொண்டு ராகுல் காந்தி பேசினார். இதன்போது அவர் மேலும் கூறுகை யில்,

“நடைபெறும் இந்த மக்களவைத் தேர்தல் இரண்டு சித்தாந்தங்களுக்கு இடையில் நடக்கும் போட்டி. காங்கிரஸ் கட்சி அரசியல் சாசனத்தை பாதுகாக்க முயற்சி செய்கிறது. பா.ஜ.க – ஆர். எஸ்.எஸ். இணைந்து அரசமைப் பையும், மக்களின் உரிமையையும் முடிவுக்கு கொண்டு வர விரும்பு கின்றன.

நரேந்திர மோடி இடஒதுக்கீட்டுக்கு எதிரானவர். அவர் இட ஒதுக்கீட்டை உங்களிடமிருந்து பறிக்க விரும்பு கிறார். இட ஒதுக்கீட்டை 50 சதவீதத் தில் இருந்து அதிகரிப்பது தான் நாட்டின் முன் உள்ள பெரிய பிரச்சினை.

காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் இடஒதுக்கீட்டை தற்போது உள்ள 50 சதவீதத்தில் இருந்து அதிகப்படுத்தும் என்று தேர்தல் அறிக்கையில் நாங்கள் வாக்குறுதி அளித்துள்ளோம். ஆனால் பா.ஜ.க. தலைவர்கள், இட ஒதுக்கீட்டை முடிவுக்கு கொண்டு வர விரும்புகி றார்கள்.

மோடி அரசுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கினார். பா.ஜ.க. தலைமையிலான அரசு கொண்டு வந்த ஒப்பந்த முறை, இடஒதுக்கீட்டை நீக்குவதாகும். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பொதுத்துறை மற்றும் அரசு அலுவலகங்களில் உள்ள ஒப்பந்த முறைகளை நீக்குவோம். நிரந்தர வேலை வாய்ப்புகள் உருவாக்குவோம். தற்காலிக வேலை வாய்ப்புகளை இல்லை.

நரேந்திர மோடி இது வரை தனது பேச்சில் இட ஒதுக்கீட்டில் உள்ள 50 சதவீத தடையை நீக்குவோம் என்று கூறியதே இல்லை. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசியல் சாசனத்தை மாற்றி அதனை முடிவுக்கு கொண்டு வந்து விடுவோம் என்று பா.ஜ.க. தலைவர்கள் நாட்டு மக்களிடம் தெரிவித்துள்ளனர். அரசியல் சாசனம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டால், இடஒதுக்கீடு நீக்கப்பட்டு விடும். பிற்படுத்தப்பட்டவர்கள், தலித் துகள், ஆதிவாசிகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருக்கவே பா.ஜ.க. விரும்புகிறது.” – என்றார்.

# பிரித்தானியா உள்ளூராட்சி தேர்தல்: ரிஷி சுனக்கிற்கு பாரிய பின்னடைவு






பிரித்தானியா உள்ளூராட்சித் தேர்தலில் இதுவரை வெளியான முடிவுகள் அடிப்படையில் பிரதமர் ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சியை லிபரல் டெமொக்ரட் கட்சி முந்தியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரித்தானியாவில் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் பல கட்டமாக வெளியாகி வருகிறது. இதுவரை வெளியான தேர்தல் முடிவுகளில் 50 கவுன்சில்களை கைப்பற்றி லேபர் கட்சி ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

மொத்தமுள்ள 107 கவுன்சில்களில் இதுவரை 106 கவுன்சில்களின் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், இதில் கடந்த முறையைவிட எட்டு கவுன்சில்கள் அதிகமாக பெற்று 50 எண்ணிக்கையுடன் லேபர் கட்சி முன்னிலையில் உள்ளது.

ஆறு கவுன்சில்களை கன்சர்வேடிவ் கட்சியும், லிபரல் டெமொக்ரட் கட்சி 12 கவுன்சில்களையும் கைப்பற்றியுள்ளதுடன் இதுவரை வெளியான முடிவுகளில் லேபர் கட்சி 1140 ஆசனங்களையும், லிபரல் டெமொக்ரட் கட்சி 521 ஆசனங்களையும் மற்றும் கன்சர்வேட்டிவ் கட்சி 513 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன.

இதில் ஆட்சியில் இருக்கும் கன்சர்வேட்டிவ் கட்சியை தடாலடியாக முந்தியுள்ளது லிபரல் டெமொக்ரட் கட்சி அத்தோடு கடந்த முறையைவிடவும் 97 ஆசனங்கள் அதிகமாகப் பெற்று தற்போது 521 ஆசனங்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

ஆனால் கன்சர்வேட்டிவ் கட்சி கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் 396 ஆசனங்களை இழந்தது மட்டுமின்றி 10 கவுன்சில்களையும் பறிகொடுத்துள்ளதுடன் கிரீன் கட்சி கவுன்சில் எதையும் கைப்பற்றாத நிலையில் கடந்த தேர்தலைவிடவும் 64 ஆசனங்கள் அதிகமாகப் பெற்று தற்போது 181 ஆசனங்களை வென்றுள்ளது.

இதுவரை வெளியான முடிவுகளின் அடிப்படையில் சுமார் 400 ஆசனங்களை இழந்து கன்சர்வேட்டிவ் கட்சி கடும் பின்னடைவை சந்தித்துள்ளது. ஆனால் தொழிற்கட்சி கடந்த உள்ளூராட்சித் தேர்தலை விடவும் இதுவரை 231 ஆசனங்கள் அதிகமாக கைப்பற்றியுள்ளது.

சுயேட்சை வேட்பாளர்கள் உட்பட ஏனைய கட்சியினர் கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் 22 ஆசனங்கள் குறைவாகப் பெற்று இதுவரை 285 ஆசனங்களுடன் நான்காவது இடத்திலுள்ளனர்.

இதனிடையே லண்டன் மேயர் தேர்தலில் மூன்றாவது முறையாக சாதிக்கான் வென்றுள்ள நிலையில் லண்டனில் உள்ள 14 தொகுதிகளில் பெரும்பாலானவை லேபர் கட்சியினரால் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காசா படுகொலையை பகிரங்கப்படுத்திய வைத்தியர் பிரான்சிற்குள் நுழைய தடை



காசா படுகொலைகள் குறித்த உண்மைகளை பகிரங்கப்படுத்திய பிரிட்டனை சேர்ந்த சத்திரசிகிச்சை நிபுணருக்கு பிரான்சிற்குள் நுழைவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

லண்டனிலிருந்து பிரான்சின் சார்ல்ஸ் டி கோல் விமானநிலையத்திற்கு சென்ற மருத்துவர் கசான் அபு சிட்டாவிடம் அவர் ஐரோப்பிய நாடுகளிற்கு செல்வதற்கு ஜேர்மனி தடை விதித்துள்ளதாக பிரான்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரலில் மருத்துவர் ஜேர்மனிக்குள் நுழைவதற்கு ஜேர்மனியின் அதிகாரிகள் தடை விதித்திருந்த நிலையில் தற்போது அவருக்கு எதிராக ஒரு வருட தடை விதிக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஜேர்மனியின் இந்த நடவடிக்கை காரணமாக மருத்துவர் ஷெங்கன் நாடுகளிற்கு பயணம் செய்ய முடியாத நிலையேற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு “நான் பிரான்ஸ் செனெட்டில் உரையாற்றவேண்டும். ஆனால் என்னை பிரான்சிற்குள் நுழைவதற்கு அனுமதிக்கின்றார்கள் இல்லை” என மருத்துவர் தெரிவித்திருந்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.05.2024




இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம். நீங்கள் இதில் முழு ஆற்றலையும் செலுத்த வேண்டியிருக்கும். பொழுதுபோக்கிற்கென சிறிது நேரமே ஒதுக்க வேண்டியிருக்கும். நீங்கள் இன்று அமைதியாக இருக்கவேண்டும்.நீங்கள் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். மேலும் நீங்கள் பணிகளை கவனமாக கையாள வேண்டியிருக்கும். உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் பேச்சில் கவனம் வேண்டும். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் கவனமற்ற வார்த்தைகளை நீங்கள் பேச வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள். இனிமையான வார்த்தைகள் மூலம் நீங்கள் பலனடைவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க சாத்தியமாகலாம். நீங்கள் உங்கள் மன உறுதியால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையான நம்பிக்கையான உறவு கொண்டிருப்பீர்கள். இன்று மிகுந்த மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும்.

இன்று நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் சொத்து அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. முக்கிய முதலீடுகளில் பங்கு கொள்வதன் மூலம் லாபம் பெறலாம்.




இன்று உங்கள் மனதில் தெளிவு காணப்படும். இதனால் உங்கள் செயல்களை திறமையாக ஆற்றுவீர்கள். பொருத்தமான செயல்களை செய்து உங்கள் நிலையை மேம்படுத்துவீர்கள். இனிமையான வார்த்தைகள் உங்களுக்கு பல நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும்.உங்கள் துணையுடன் வெளிப்படையாக கருத்துக் களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி பற்றிய ஆலோசனை நடத்துவீர்கள்.இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். லாபம் தரும் முதலீட்டிற்கானபயனுள்ள திட்டங்களில் பங்கு கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் அமைதியை உணர்வீர்கள். கூடுதல் பொறுப்புகள் உங்களுக்கு கவலை அளிக்கும். இரவில் தூக்கமின்மை காணப்படும்.

நீங்கள் சிறந்த பலனைக் காண மிகக் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி பெற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த அனுபவம் திருப்தி அளிக்கும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்றைய தேவைகளை பூர்த்தி செய்வது கடினமாக காணப்படும்.உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று அதிருப்தியான நிலை காணப்படும். அனுசரணையான போக்கு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். சிறந்த பலன் காண உங்கள் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உங்கள் எதிர்காலத்திற்காக நீங்கள் திட்டமிட வேண்டும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். பணியில் கவனமாக இருப்பதன் மூலம் தவறுகள் நேராமல் தவிர்க்கலாம். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்றவும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிலவ வேண்டுமெனில் நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாகப் பேச வேண்டும்.




இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள். இது உங்கள் நிதிநிலையை மேம்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மன தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும்.




இன்றைய நிகழ்வுகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். மொத்தத்தில் உங்கள் செயல்திறனில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாகவும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதுமானதாகவும் இருக்கும்.




இன்று செயல்கள் சீராக நடக்க சாதகமாக இருக்காது. இன்று அதிக பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கூடுதல் பணிகள் காரணமாக திட்டமிட்டபடி பணிகளை செய்வது கடினமாக இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொள்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். உங்களுக்கு கூடுதல் செலவுகள் ஏற்படும். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 06.05.2024



## தனுசு

இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. நீங்கள் சமநிலை இழப்பீர்கள். நற்பலன்கள் காண எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் இன்று சிறந்த பலன் அளிக்காது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகள் சலிப்பூட்டுவதாக இருக்கும். நீங்கள் சிறந்த பணி மாற்றம் விரும்புவீர்கள். அது இன்று சாத்தியமில்லை,

கடுமையான வார்த்தைகள் மற்றும் செயல்கள் உங்கள் துணையின் மனதில் காயத்தை ஏற்படுத்தும். இதனால் உறவின் ஸ்திரத்தன்மை பாதிக்கும்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கூடுதல் சுமையாக இருக்கும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.



## கும்பம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக உங்களுக்கு வளர்ச்சி அளிக்கும் சில மதிப்பு மிக்க வாய்ப்புகளை இழப்பீர்கள்.

பணியிடத்தில் வெற்றிகள் அதிக அளவில் காணப்படாது. இதனால் பணிகள் தேங்கிக் கிடைக்கும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கலாம்.

மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். அற்ப காரணங்களுக்காக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுபடுத்த இயலாது.



## மகரம்

இன்று சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். முக்கிய இலக்குகளை அடைய திட்ட மிடலாம். நீங்கள் எதிர்பார்த்ததை விட இன்று அதிகம் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் அதிக வாய்ப்புகள் காணப்படும். நீங்கள் பணிகளை திறமையாகவும் விரைவாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் உறுதி காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த அமைதியனா தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இன்றைய நாள் இனிமையாக சிறப்பாக இருக்கும்.

உங்களின் சேமிப்பு ஆற்றல் சிறந்த முறையில் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீடுகளில் நீங்கள் பங்கு பெறலாம். இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களின் மன உறுதியே இதற்கு காரணம்.



## மீனம்

இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. பதட்டமான சூழ்நிலை கவலை அளிக்கும். நீங்கள் சில தடைகளை சந்திப்பீர்கள். அது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். சிறந்த வளர்ச்சி காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் மேலதிகாரியுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அதிகப் பணிகளால் மகிழ்ச்சி குறையும். உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

குடும்ப பிரச்சினை சிலவற்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். கருத்துள்ள பேச்சு வார்த்தைகள் மூலம் இந்த வேறுபாட்டை சரி செய்யலாம்.இன்று நிதிக் கட்டுப்பாடு காணப்படும். இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.

